# பன்மொழி மற்றும் இருமொழிக் குழந்தைகளை வளர்த்தல்: தெரிவுகள்

பொருந்துவது
0-18
வயதினர்

https://raisingchildren.net.au/newborns/connecting-communicating/bilingualism-multilingualism/raising-bilingual-children-tips

**முக்கியப் புள்ளிகள்**

- **இருமொழி மற்றும் பன்மொழிக் குழந்தைகளை வளர்ப்பதற்கு இரண்டு முக்கிய மாதிரிகள் உள்ளன - ஒருநபர்-ஒருமொழி மற்றும் மரபு மொழி வீட்டு மொழியாக.**
- **குழந்தைகள் ஆங்கிலம் தவிர்த்து பிற மொழிகளில் பரந்துபட்ட அளவில் அருஞ்சொற்பொருளைக் கற்றுக் கொள்வதற்கு சிறந்த வழி அந்த மொழிகளை அவர்களுடன் எப்போதும் பயன்படுத்துவதாகும்.**
- **உங்கள் குழந்தையின் பன்மொழி அல்லது இருமொழி வளர்ச்சிக்கு விளையாட்டு, சமூக நடவடிக்கைகள் மற்றும் அன்றாட வீட்டுச் செயல்பாடுகள் மூலம் நீங்கள் உதவலாம்.**

## பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தைகளை வளர்ப்பது குறித்து

நீங்களும் உங்கள் துணைவரும் ஆங்கிலம் தவிர்த்த மொழிகளில் பேசினால், இந்த மொழிகளை உங்கள் கற்றுவளர நீங்கள் விரும்பக் கூடும். பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தையை வளர்ப்பது பல நன்மைகளைக் கொண்டுள்ளது. உதாரணமாக உங்கள் குடும்பத்திலும் தூரத்து சொந்தங்களிடையிலும் செய்தித்தொடர்பையும் பிணைப்பையும் மேம்படுத்தும்.

குழந்தைகள் ஆங்கிலம் தவிர்த்து பிற மொழிகளில் பரந்துபட்ட அளவில் அருஞ்சொற்பொருளைக் கற்றுக் கொள்வதற்கு சிறந்த வழி அந்த மொழிகளை அவர்களுடன் எப்போதும், குறிப்பாக ஆரம்ப ஆண்டுகளில் பயன்படுத்துவதாகும்.

## பன்மொழி அல்லது இருமொழிக் குழந்தைகளை வளர்த்தல்: உங்கள் குடும்பத்தின் தெரிவுகள்

உங்கள் குழந்தை உங்கள் மொழிகளைப் பயன்படுத்தக் கற்பதில் உதவுவது குறித்த உங்களின் மற்றும் உங்கள் துணைவரின் முடிவுகளானது உங்கள் குடும்பச் சூழலைப் பொறுத்தது.

### ஒரு நபர்-ஒரு மொழி


© Raising Children Network

நீங்களும் உங்கள் துணைவரும் வெவ்வேறு மொழிகள் பேசினால், பன்மொழியம் அல்லது இருமொழியத்துக்கு **ஒரு நபர்-ஒரு மொழி மாதிரி** உங்களுக்கு ஏற்றதாக இருக்கும்.

உதாரணமாக, உங்கள் மொழி ஆங்கிலமாக இருந்து உங்கள் துணைவரின் மொழி சீனமொழியாக இருந்தால், உங்கள் குழந்தையிடம் நீங்கள் ஆங்கிலத்திலும் உங்கள் துணைவர் சீனமொழியிலும் பேசுவீர்கள்.

இந்த மாதிரியானது **ஆங்கிலம் தவிர ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளுக்கு** உதவலாம். உதாரணமாக, நீங்கள் ஸ்பானிய மொழி பேசுபவராகவும் உங்கள் துணைவர் இத்தாலிய மொழியிலும் பேசுபவராகவும் இருந்தால், வீட்டில் உங்கள் குழந்தையிடம் அவரவர் சொந்த மொழியில் பேசுவீர்கள். நீங்கள் இருவரும் ஆங்கிலம் நன்றாகப் பேசுபவர் எனில், வீட்டுக்கு வெளியே அவர்களுடன் ஆங்கிலத்தில் பேசலாம். உங்கள் குழந்தை பள்ளியிலும் சமூகத்திலும் ஆங்கிலத்தில் பேசக் கற்றுக் கொள்ளும்.

ஒருவர் மற்றவரது மொழியைப் புரிந்துகொண்டால் உங்கள் குழந்தையிடம் உங்கள் மொழியைப் பேசும்போது அவர் தனித்து விடப்பட்டவராக உணரமாட்டார்.

**வீட்டு மொழியாக மரபு மொழி**
நீங்களும் உங்கள் துணைவரும் ஒரே மரபுமொழியைப் பேசினால், வீட்டில் நீங்களும் உங்கள் குடும்பமும் பேசும்மொழியாக அதைத் தெரிவு செய்யலாம்.

உதாரணமாக, நீங்கள் ஈராக்கிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு குடியேறியவர் எனில் வீட்டில் உங்கள் குழந்தையிடம் அராபிய மொழியில் பேசலாம். அராபிய மொழி உங்கள் மரபுமொழி. உங்கள் குழந்தை பள்ளிக்குச் சென்று தனது நண்பர்களுடனும் ஆசிரியர்களுடனும் ஆங்கிலத்தில் பேசக் கற்றுக்கொள்ளும்.

இன்னொரு உதாரணம், உங்களுக்கும் உங்கள் துணைவருக்கும் கேட்புத்திறன் குறைபாடு இருந்து அப்படி குறைபாடு இல்லாத குழந்தையை வளர்ப்பது. உங்கள் குழந்தை ஆஸ்திரேலிய காதுகேளாதோருக்கான சைகை மொழியை வீட்டில் கற்றுக் கொண்டு, கேட்புத்திறனுள்ள சமூகத்தில் ஆங்கிலத்தைக் கற்கலாம்.

மரபுமொழி மாதிரி என்பது மரபுமொழியை அதிகளவில் உங்கள் குழந்தை கேட்கவும், பேசவும், பயன்படுத்தவும் செய்வதாகும். காரணம் குடும்பத்தில் ஒவ்வொருவரும் அதைப் பயன்படுத்துவதால்.

குழந்தைகள் பெரியவராகும்போது ஆங்கிலம் தவிர்த்து பிற மொழிகளில் பேச பிரியப்படாமல் போகலாம். உங்கள் குழந்தை ஆங்கிலத்தில் பதிலளிப்பது அதிகரித்தால் மொழிகளை சம அளவில் வைத்திருப்பது நல்லது.

## பன்மொழி மற்றும் இருமொழிக் குழந்தைகளை வளர்த்தல்: உதவிக் குறிப்புகள்

உங்கள் குழந்தையின் பன்மொழி அல்லது இருமொழி வளர்ச்சிக்கு உதவும் சில நடைமுறை உதவிக்குறிப்புகள் இதோ.

**விளையாடுதல் மற்றும் கேம்கள்**

- உங்கள் மொழியில் வாசித்து கதைகளைச் சொல்லுங்கள். உங்கள் குழந்தையை உங்களுடன் இணைந்துகொள்ள ஊக்கப்படுத்துங்கள். ஜோடனைகளைப் பயன்படுத்தி புதுமையாகச் செய்யுங்கள்!


© Raising Children Network

- உங்கள் மொழியில் கேம்களை விளையாடுங்கள். குறிப்பாக மொழியில் கவனம் செலுத்தும் 'கண்ணாமூச்சி', பிங்கோ, 'நான் யார்?' மற்றும் நினைவுத்திறன் போன்ற விளையாட்டுக்கள்.
- உங்கள் மொழியில் இசையை ஒலிக்கவிட்டு, பாட்டுப்பாடி, நடனமாடுங்கள். குழந்தைகளுக்கு இசை பிடிக்கும். இனிய ராகங்கள் அவர்கள் விசயங்களை நினைவில் வைத்திருக்க உதவக்கூடிய சிறந்த வழியாகும்.
- உங்கள் குழந்தைக்கு உங்கள் மரபுமொழியில் வார்த்தை விளையாட்டுச் செயலிகள் கிடைக்கிறதா என்று பாருங்கள்.

**சமூக நடவடிக்கைகள்**

- உங்கள் குழந்தை உங்கள் மொழியைப் பேச உதவும் பள்ளிகள், குழந்தை பராமரிப்பு மையங்கள் அல்லது பன்மொழி மற்றும் இருமொழித் திட்டங்கள் இருக்கிறதா என்று பாருங்கள்.
- ஒரே மரபு மொழியை பேசக்கூடிய மற்ற குழந்தைகளுடன் விளையாட நேரம் அமையுங்கள்.
- உங்கள் மொழிப் பேச்சாளர்களிடம் செல்ல அல்லது அவர்களை அழைத்துவரச் செய்யுங்கள். உங்களால் முடிந்தால் உங்கள் மொழியைப் பேசும் நாடுகளுக்குச் சென்றுவருவது உங்கள் கலாச்சாரத்தின்மீது உங்கள் குழந்தையின் ஆர்வத்தையும் பேசும் திறனையும் அதிகரிக்கும்.
- நூலகத்துக்குச் சென்று உங்கள் மொழியிலுள்ள சிடிக்களையும், டிவிடிகளையும், படப் புத்தகங்களையும், வயதுக்கு ஏற்ற கதைப் புத்தகங்களையும் இதழ்களையும் இரவல் பெறுங்கள்.
- நீங்களும் உங்கள் குழந்தையும் உங்கள் குடும்பத்தின் கலாச்சார மரபையும் அடையாளத்தையும் காட்டும்வகையில் ஒன்றாகச் செய்யக்கூடிய கலாச்சார நடவடிக்கைகளைத் தேடிப்பாருங்கள். உதாரணமாக, ஆஸ்திரேலியாவில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தில் ஹார்மோனி தினம் பரவலாகக் கொண்டாடப்படுகிறது.

**வீட்டில்**

- பிரபல இசை நிகழ்ச்சிகள் மற்றும் பதின்பருவத்தினருக்கான அலைவரிசைகள் உட்பட உங்கள் மொழியில் உள்ள வானொலி நிகழ்ச்சிகளைக் கேளுங்கள்.
- அயல்நாடுகளில் வசிக்கக்கூடிய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் இருந்தால், காணொளிச் செய்திச் செயலி அல்லது ஆன்லைன் மூலமாக அவர்களுடன் இணைய உங்கள் குழந்தையை ஊக்கப்படுத்துங்கள்.
- உங்கள் குழந்தைக்கு எதில் ஆர்வமென்று சிந்தியுங்கள் - உதாரணமாக, கால்பந்தாட்டம், இசை, டிவி நிகழ்ச்சிகள், சமையல் போன்றவை. இந்த ஆர்வங்களுடன் உங்கள் மொழியை இணைக்க முயற்சியுங்கள். உதாரணமாக, உங்கள் குழந்தையின் பிடித்தமான சமையல் குறிப்பையோ, ஒரு உங்கள் சமூகத்தின் குறிப்பிடத்தக்க சமையற்குறிப்பையோ பார்த்து உங்கள் மொழியை மட்டும் பயன்படுத்தி ஒன்றாக இணைந்து சமைக்கலாம்.
- உங்கள் மொழியில் திரைப்படங்களை அல்லது விளையாட்டைப் பாருங்கள் - உதாரணமாக, செயற்கைக்கோள் டிவி அல்லது ஆன்லைன் காட்சியோட்டச்


© Raising Children Network

சேவைகள் மூலமாக. சிலநேரங்களில் வசனத்தை அல்லது வசனவுரையை ஆங்கிலத்திலிருந்து பிற மொழிகளுக்கு மாற்றலாம்.

- உங்கள் வளர்ந்த குழந்தையை அல்லது பதின்பருவத்தைச் சேர்ந்தவருக்கான பிற மொழிகளில் உள்ள பாதுகாப்பான, ஆர்வம் அடிப்படையிலான ஆன்லைன் சமூகங்களைக் கண்டுபிடியுங்கள். பதின்பருவத்துக்கு முந்தைய இணையப் பாதுகாப்பையும் பதின்பருவ இணையப் பாதுகாப்பு குறித்தும் கவனம் கொள்ளுங்கள்.


© Raising Children Network